**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**
**வழக்கு எண்.535/2018**
**வழக்கு சாட்சி.3**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **மலர்விழி** |
| **தந்தை பெயர்** | **:** | **மாரிபாண்டி** |
| **கிராமம்** | **:** | |
| **தாலுக்கா** | **:** | |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **கிளை மேலாளர், SBI Bank. Dindigul.Town Branch** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | |

**17.02.2023**
நான் தற்போது திண்டுக்கல் State Bank of India, டவுன் கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சாட்சி அழைப்பாணையின் பேரில் நான் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளேன். இவ்வழக்கின் புகார்தாரர் எங்களது வங்கியில் 36956166372 எண்ணில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். மேற்படி வங்கி கணக்கில் புகார்தாரர் 15.07.2018ம் தேதி 001063 எண்ணுள்ள 5 லட்ச ரூபாய்க்கான காசோலையையும், 01.08.2018ம் தேதி 001064 எண்ணுள்ள 5 லட்ச ரூபாய்க்கான காசோலையையும் வசூலுக்கு செலுத்தினார். மேற்படி காசோலைகள் முறையே 17.07.2018ம் தேதியும் 01.08.2018ம் தேதியும் Funds Insufficient என திருப்பபட்டுள்ளது. மேற்படி காசோலைக்குரிய வங்கி சிட்டி யூனியன் வங்கி, பல்லடம் கிளை ஆகும்.

புகார்தாரர் 01.04.2018 முதல் 09.09.2018 வரை எங்களது வங்கியில் வரவு செலவு செய்ததற்கான கணக்கு பட்டியல் எனது கையொப்பத்துடன் உள்ளது. **( கணக்கு பட்டியல் பு.சா.ஆ.13 . ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**<u>குறுக்கு விசாரணை .</u>**

பு.சா.ஆ.13 ஆவணத்தில் 04.04.2018 ம் தேதி புகார்தாரருக்கு சம்பளமாக ரூ.1794 வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போன்று 02.05.2018ம் தேதியும் 02.06.2018 ம் தேதியும் 02.07.2018 ம் தேதியும், 01.08.2018ம் தேதியும் , 01.09.2018ம் தேதிகளில் ஒவ்வொரு தேதியிலும் சம்பளம் வாங்கிய வரவாக புகார்தாரர் கணக்கில் ரூ1794 வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

02.06.2018ம் தேதியில் காசோலை எண் 564871 மூலமாக 2 1/2 லட்ச ரூபாய் புகார்தாரரருக்காக LIF Finance என்ற நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது (Transfered) என்றால் சரிதான், 04.06.2018 ம் தேதி புகார்தாரருக்கு நாங்கள் வழங்கிய காசோலை எண். 564872 மூலமாக ரூ.52 ஆயிரத்து 5 ரூபாய் புகார்தாரர் கணக்கிலிருந்து மற்றொரு வங்கிக்கு left ஆகி உள்ளது என்றால் சரிதான்.

19.06.2018ம் தேதியில் காசோலை எண். 564874 மூலமாக ரூ.2 லட்சத்து 10 ஆயிரத்து தொள்ளாயிருத்து 60 ரூபாய் புகார்தாரர் கணக்கிலிருந்து LIC Housing Finance க்கு எடுக்கப்பட்டுள்ளது. 02.08.2018ம் தேதியில் காசோலை எண். 564875 மூலமாக ரூ.1 லட்சத்து 22 ஆயிரத்து 302 ரூபாய் மற்றொரு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போன்று 09.08.2018ம் தேதி காசோலை எண். 564876 மூலமாக ரூ. 2 லட்சத்து 8 ஆயிரத்து 808 ரூபாய் புகார்தாரர் கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.08.2018 ம் தேதி காசோலை எண். 564877 ன் மூலமாக ரூ.6 ஆயிரம் மற்றொரு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

03.09.2018ம் தேதி காசோலை எண்.564878 ன் மூலமாக ரூ.35 ஆயிரத்து 5 ரூபாய் மற்றொரு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மூலமாக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தில் புகார்தாரருக்கு எங்களது வங்கியால் கொடுக்கப்பட்ட காசோலைகளும் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட காசோலைகளும் தவிர வேறு காசோலைகளின் மூலமாக பரிவர்த்தனை கணக்கிற்கு வந்ததாக பரிவர்த்தனை இல்லை என்றால் சரிதான்.

தாவா வழக்கு காசோலைகளில் ஒன்றான காசோலை எண். 001062 ஆனது நான் குறியீடு செய்த வங்கி ஆவணத்தில் 02.07.2018ம் தேதி வசூலுக்கு செலுத்தப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு காசோலைகளை 15.07.2018ம் தேதியிலும் ,01,08,2018ம் தேதியிலும் வசூலுக்கு செலுத்தியதற்கான குறிப்பு பு.சா.ஆ.13 ல் இல்லை என்றால் சரிதான். புசா.ஆ.13 ல் புகார்தாரருக்கு வரவு உள்ளதாக காட்டப்படும் காலத்தில் (Credit) சம்பளமாக ரூ.1794/- வரவுகளும், வழக்கு காசோலையில் சம்மந்தப்பட்ட வரவுகளும் தவிர மற்ற வரவுகளானது புகார்தாரர் அவராகவே செலுத்திய வரவுகள் (self) மட்டுமே உள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Sd.N.Meenatchi.17.02.2023
Judicial Magistrate No.II
Dindigul.